1978 மார்ச் 18]

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த அலுவலகமானது எந்த இடத்தில் இருக்கிறது? இதற்கு முன்பு இருந்தபோது எவ்வளவு வாடகை கொடுக்கப்பட்டு வந்தது? இப்போது அதிகமாக வாடகை கொடுக்க வேண்டிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அலுவலகம் சென்னை அண்ணுசாலையில், 160 எண் உள்ள கட்டிடத்தில் இருக்கிறது. பச்சையப்பா அறக் கட்டளைக்குச் சொந்தமான இக் கட்டிடத்தின் 5, 6 மாடிகளில் அலுவலகம் இயங்கி வருகிறது.

திரு. ஈஸ்வரமூர்த்தி பி. என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நம்முடைய அரசாங்கத்தில் இப்படிப்பட்ட கட்டடங்கள் வாடகை கட்டடங்களில் இருந்தால், அதை மாற்றி அரசுக்குச் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டி அவற்றைக் கொண்டு வருவது என்று திட்டமிடப்பட்டிருந்தது. அந்த முறையில் சீக்கிரமாக இதற்கும் சொந்தமாகக் கட்டடம் கட்டி இப்போது வாடகைக் கட்டடத்தில் நடைபெற்று வருகின்ற இதையும் மாற்றுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கட்டத்தை மாற்றியதன் காரணமாக லாபம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், அரசாங்க அலுவல்கள் தனியாருக்குச் சொந்தமான வீடுகளில் எவ்வளவு நடைபெறுகின்றன என்கின்ற புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் வாடகை கட்டடத்தில் அதாவது தனியாருக்குச் சொந்தமான இடங்களில் அரசு அலுவலகம் நடைபெற்று வருகிறதோ அவைகளை மாற்ற வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆனல் அது நீண்ட நாள் திட்டம் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திருப்பூரில் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினு 616—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்க இரண்டாம் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து நகராட்சி மன்றம் அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம். பூர்வாங்க மதிப்பீட்டில் செலவிடப்பட்ட தொகை போக மீதத் தொகையைக் கொண்டு இப்போதுள்ள திட்டத்தை மேம்பாடு செய்து தர வேண்டுமென்று நகராட்சி மன்றம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டுக் கொண்டது.

(ஆ) தலைமை நிலையத்திலும் மற்றும் நீரேற்றுக் குழாயின் வழியில் அமைந்துள்ள நீருந்து நிலையங்களிலும் அதிக சக்தி யுள்ள விசையேற்றங்கள் பொருத்தப்படும். சரிவு நீரேற்றக் குழாயிலும், மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு நீரேற்றும் இடமான தரை மட்ட நீர்த்தேக்கத் தொட்டி இருக்கும் இடத்திலும், நீருந்து நிலையங்கள் அமைக்கப்படும். ரூ. 19.61 இலட்சம் மதிப்பீட்டில் மேற்சொன்ன மேம்பாடு களுக்கான திட்டம் வகுக்கப்பட்டு அதற்குத் தொழில் நுட்ப ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. திட்ட வேலைகள் துவங்கப்பட் டுள்ளது.

[முற்பகல் 9-30]

திரு ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் குடி தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. எனவே இத் திட்டத்தை அரசு எப்போது நிறைவேற்றும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, திட்ட வேலை துவங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அந்தத் தகவல் மட்டும்தான் இருக்கிறது.

திரு கு. ரமணி: தலைவர் அவர்களே, திருப்பூர் ஏராளமான ஜனத்தொகையைக் கொண்ட நகரமாக வளர்ந்து வரக்கூடிய நகரம் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். இப்போது துவங் கப்பட்டிருக்கும் இந்த உப திட்டத்தின்படி எத்தனை லட்சம் ஜனங்களுக்குத் தண்ணீர் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றும், தலைக்கு எவ்வளவு காலன் தண்ணீர் கிடைக்கும் என்றும் ஏதாவது கணக்கு உண்டா? அப்படிக் கணக்கு இருக்குமானால் அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட தகவலாக இருக்கிறது. படிப்பதற்கு நேரம் அதிகமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எழுத்து மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமி அமைச்சர் அவர்கள் இந்த உப தண்ணீர் திட்டத்தைப் பற்றி, 19 லட்சத்திற்கு மேற்பட்ட இந்த

1978 மார்ச் 18]

இடைக்காலத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவிநாசி வழியாக திருப்பூர் நகரத்திற்குத் தண்ணீர் வந்து கொண்டிருக்கும் செகண்டு லைன் ஸ்கீம் என்ற இன்னொரு பெரிய திட்டத்தை உருவாக்கக்கூடிய செயற் குறிப்புகள் நம்முடைய அரசிடத்தில் ஏதாவது இருக்கிறதா? அதை உடனடியாக அமலாக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு நகராட்சியால் அனுப்பப்பெற்று, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இங்குள்ள தகவல்படி அப்படி ஒன்றுமில்லை. திரு. ரமணி அவர்களுக்குச் சொன்னதுபோல், இப்போதுள்ள திட்டத்தின் முக்கியமான தகவல்கள் உங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

திரு. சொ. ந. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் குடிநீர் திட்டத்தின்கீழ் வழியோர கிராமங்களுக்குத் தண்ணீர் விநியோகிக்கின்ற முறைகளைச் செய்து தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

நெல்லிக்குப்பத்தில் குடிநீர் வழங்கு திட்டம்.

*வினு 617—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் நகராட்சியில், பெண்ணையாற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏதாவது அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு. திரு. எஸ். இராகவானந்தம்:

இல்லை. எனினும், நகரிலேயே ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அவற்றிலிருந்து நகருக்குக் குடிநீர் வினியோகம் செய்யத் திட்டம் ஒன்று செயலில் உள்ளது.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் 'பைலேரியா' பகுதி என்று ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கே கிடைக்கக்கூடிய தண்ணீரும் உவர்ப்பாக இருக்கின்ற காரணத்தால், பெண்ணை ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொண்டு வந்தால், அது சுகாதாரத்திற்கும் உகந்ததாக இருக்கும். எனவே, இங்கே கிடைக்கக் கூடிய தண்ணீரும் அப்படிப்பட்ட நல்ல தண்ணீராக